க.பொ.த (உ/த) பரீட்சை - 2013
கணக்கீடு I

நேரம் : 2 மணித்தியாலம்

01. வாசன் வியாபாரத்தில் 30.06.2012இல் மொத்த சொத்துக்கள் ரூபா 250,000 மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 50,000 ஆகவிருந்தது. 2012 யூலை மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடந்தேறின. கிரயத்தில் $33\frac{1}{3}\%$ இலாபம் பெறத்தக்க வகையில் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனை ரூபா 250,000 ஆகவும் உட்திரும்பிய பண்டங்களின் பட்டியல் பெறுமதி ரூபா 12,000 ஆகும். (விற்பனை விலையில் 20% இலாபம் பெறத்தக்க பட்டியல் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது) உரிமையாளர் எடுப்பனவு செய்த பண்டங்களின் கிரயம் ரூபா 15,000 மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 31.07.2012இல் வாசனின் மூலதனம் எவ்வளவு

1. ரூபா 12,600	2. ரூபா 212,600
3. ரூபா 245,100	4. ரூபா 227,600
5. ரூபா 262,600	

02. மயூரன் நிறுவனம் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனமாகும். ரங்கன் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்ட பலரக தொலைக்காட்சி பெட்டிகள் விபரம் வருமாறு 15.01.2012இல் ஒவ்வொன்றும் ரூபா 60,000 கொண்ட 10 தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒவ்வொன்றும் ரூபா 50000 கொண்ட 15 தொலைக்காட்சிப் பெட்டிகள். இவ் விற்பனைக்கு 10% வியாபாரக் கழிவு வழங்கப்படுவதுடன் இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன் இவற்றுக்கான பணம் மீளப் பெறப்படுமாயின் காசுக் கழிவு அனுமதிக்கப்படும். இதற்கமைய 10.03.2012இல் இவ்விற்பனை தொடர்பாக ரங்கன் நிறுவனத்திடமிருந்து ரூபா 1,154,250 பெறப்படின் காசுக் கழிவு

1. 6%	2. 5%
3. 4%	4. 10%
5. 2%	

03. சுகந்தன் வியாபாரத்தின் 31.03.3012 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமப்படவில்லை. பின்னர் பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன.
- ரூபா 500 பெற்றகழிவு கொடுத்த கழிவுக் கணக்குகளில் ரூபா 1,500 என வரவில் பதியப்பட்டிருந்தது.
- ரூபா 3,500 வாடகை வருமானம் பரீட்சை மீதியின் வரவில் பதியப்பட்டிருந்தது.
- கொடுத்த காப்புறுதி ரூபா 400 காப்புறுதி கட்டணக் கணக்கில் ரூபா 1,400 எனப் பதியப்பட்டிருந்தது.

மேற்கூறிய காரணங்களினால் இப்பரீட்சை மீதியல்

1. வரவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 10,000 இனால் குறைந்திருக்கும்.
2. வரவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 6,500 இனால் குறைந்திருக்கும்.
3. வரவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 17,000 இனால் குறைந்திருக்கும்.
4. செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 10,000 இனால் குறைந்திருக்கும்.
5. செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூபா 6,500 இனால் குறைந்திருக்கும்.

04. கம்பனியொன்றில் 31.03.2012இல் ஏற்பட்ட தீ விபத்தில் கம்பனியில் இருப்புகளில் ஒரு பகுதி சேதமடைந்தது. தீ விபத்தினால் காப்பாற்றப்பட்ட இருப்புகளின் பெறுமதி ரூபா 10,000 ஆகும். இத்தினத்தில் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. 01.04.2011இல் இருப்பு ரூபா 40,000, வருடத்திற்கான கொள்வனவு ரூபா 100,000, வருடத்துக்கான விற்பனை ரூபா 200,000 நிறுவனத்தின் சாதாரண மொத்த இலாபம் விற்பனையில் 40% ஆகும். தீயினால் அழிவடைந்த இருப்புக்களின் 60%த்தினை நட்டஈட்டு கம்பனி தருவதாக ஒப்புக்கொண்டுள்ளது. தீயால் அழிந்த இருப்பின் பெறுமானமும் நட்டஈட்டு உத்தரவாதமும் முறையே

1. ரூபா 20,000 ரூபா 12,000	2. ரூபா 10,000 ரூபா 6,000
3. ரூபா 40,000 ரூபா 24,000	4. ரூபா 80,000 ரூபா 48,000
5. ரூபா 100,000 ரூபா 60,000	

05. பொருட் பெறுவனவுப் பத்திரம் பற்றி பின்வரும் கூற்றுகளில் எது சரியான கூற்று
1. பண்டங்களை வழங்குமாறு வழங்குனருக்கு உறுதியளிக்கும் ஆவணம்
2. உற்பத்திப் பகுதியிலிருந்து களஞ்சியசாலைக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் ஆவணம்

3. வழங்குனரிடமிருந்து பண்டங்களைப் பெறுவதற்கான உறுதியளிக்கும் ஆவணம்
4. களஞ்சிய சாலையினால் கொள்வனவு செய்யும் பகுதிக்கு அதிகாரம் வழங்குவதற்கான ஆவணம்
5. வழங்குனரிடமிருந்து பெற்ற பண்டங்களுக்கான கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரமளிக்கும் ஆவணம்

06. A சொத்தொன்றின் சந்தைப் பெறுமதியை புத்தகங்களில் காட்டுவது கடந்த கால வரலாற்றுக் கிரயத்துக்கு முரணானது.

B உரிமையாளரின் சொந்த ஆயுட் காப்புறுதிக் கட்டணத்தை வியாபாரத்தில் வருமானக் கூற்றில் பதியாது விடல் தொழில் முழுமை கூற்று தாக்கத்துக்கு அனுசரணையானதாகும்.

C ஐயக்கடனுக்கான ஏற்பாடு மேற்கொள்ளல் பாதுகாப்பு கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்வதாகும்.

மேற்படி கூற்றுக்களில் எது / எவை உண்மையானதாகும்.

1. Aயும் Bயும் மட்டுமாகும்
2. Aயும் Cயும் மட்டுமாகும்
3. B மட்டும்
4. A, B, C அனைத்தும்
5. C மட்டும்

07. வியாபாரமொன்றில் 31.03.2012இல் முடிவடைந்த கணக்காண்டு தொடர்பாக செலுத்தப்பட்ட வாடகை ரூபா 20,000 ஆகும். 31.03.2011இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக மாதாந்த வாடகை ரூபா 2,000 ஆகவும் 31.12.2012இல் முடிவடைந்த வருடத்துக்காக மாதாந்தம் ரூபா 2,500 ஆகவும் இருந்தது. வருமானக் கூற்றிலும் ஐந்தொகையிலும் காட்டத்தக்க வாடகையானது.

1. ரூபா 18,000 ரூபா 20,000
2. ரூபா 24,000 ரூபா 4,000
3. ரூபா 25,500 ரூபா 5,500
4. ரூபா 30,000 ரூபா 10,000
5. ரூபா 31,500 ரூபா 11,500

08. கொள்வனவு நாளேடு பற்றிய மிகவும் சிறப்பான விளக்கமானது

1. கொள்வனவுப் பட்டோலையொன்றாகவிருத்தல்.
2. கடன் கொள்வனவுப் பட்டோலையொன்றாகவிருத்தல்.
3. கொடுக்கல் வாங்கல்களுக்கான கணக்குகளில் கூட்டுத்தொகையாகவிருத்தல்.
4. இரட்டைப் பதிவுகளின் ஒரு பகுதி என்பதாயிருத்தல்
5. அனைத்து கொள்வனவுகளுக்குமான பட்டோலையாகவிருத்தல்

09. நிதிக்கூற்றுகள் மாதிரி சட்டகத்திற்கு நிதிக்கூற்றுகளின் நம்பகத்தன்மைகளைப் பாதுகாக்க வேண்டுமானால்

1. நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையில் தயாரித்து முன்வைத்தல்.
2. நிதிக்கூற்றுக்களை கணக்காய்வுக்கு முன்வைத்தல் வேண்டும்.
3. நிதிக்கூற்றுக்களை அளவு ரீதியான உருப்படிகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.
4. நிதிக்கூற்றுகளை காசு அடிப்படையில் தயாரித்தல் வேண்டும்.
5. பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அடிப்படையாக இருத்தல் வேண்டும்.

10. பின்வரும் கூற்றுக்களில் உற்பத்தி கிரயத்தைக் காட்டும் சரியான கூற்று யாது?

1. உற்பத்தி மேந்தலைக் கிரயம் + நேர் மூலப்பொருட் கிரயம் + நேர்க்கூலிக் கிரயம்
2. நேர் மூலப்பொருட் கிரயம் + மூலக்கிரயம் + மேந்தலைக் கிரயம்
3. உற்பத்தி மேந்தலைக் கிரயம் + பயன்படுத்திய மூலப்பொருட் கிரயம் + ஏனைய நேர்க்கிரயம்
4. உற்பத்தி மேந்தலைக் கிரயம் + நேர்க்கூலிக்கிரயம் + வேறு நேர் செலவு
5. நேர்மூலப்பொருட்கிரயம் + உற்பத்தி மேந்தலைக் கிரயம் + மூலக்கிரயம்

11. பின்வரும் விடயங்களில் திரவத்தன்மை விகிதத்தில் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்

1. முன்னுரிமை பங்கை வெளியிடல்
2. மோட்டார் வாகனமொன்றை காசுக்கு விற்றல்.
3. கடன்பட்டோரிடமிருந்து காசு பெறுதல்.
4. உரிமை வழங்கல் மூலம் காசு பெறல்.
5. கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்தல்.

12. வரையறுத்த டேவிற்சன் கம்பனியின் நிதிக்கூற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் வருமாறு

	01.04.2011	01.04.2011
நிறுத்தி வைத்த இலாபம்	200,000	300,000
பொது ஒதுக்கம்	100,000	150,000
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	75,000	125,000

2011/2012ம் ஆண்டுக்கான செலுத்திய பங்கு இலாபம் ரூபா 80,000 ஆகும். மேற்படி தகவல்களின் அடிப்படையில் 31.03.2012இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்கு பின்னரான இலாபம்

1. ரூபா 100,000
2. ரூபா 150,000
3. ரூபா 230,000
4. ரூபா 200,000
5. ரூபா 500,000

13. குத்தகையாளரிடமிருந்து பெறப்பட்ட குத்தகையாதனம் நிறுவனத்தின் ஐந்தொகையில் சொத்தாகக் காட்டுவதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கரு யாது?
    1. பாதுகாப்பு எண்ணக்கரு
    2. பொருண்மை எண்ணக்கரு
    3. வரலாற்று கிரய எண்ணக்கரு
    4. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
    5. அட்டுறு எண்ணக்கரு

14. அடுத்தாண்டு அறிமுகப்படுத்தப்படவிருக்கும் உற்பத்திப் பொருளொன்றின் சந்தைப்படுத்தல் பிரசாரத்திற்காக நடைமுறையாண்டில் ஆய்வு செய்யப்பட்ட பாரிய தொகை தொடர்பில் பின்வருவனவற்றுள் எது சரியானது?
    1. சொத்தொன்றாக இனங்காணுதல்.
    2. அடுத்தாண்டுக்கான செலவொன்றாக இனங்காணல்.
    3. அவ் உற்பத்தி பொருளின் மேந்தலைக் கிரயமாக இனங்காணல்.
    4. நடைமுறையாண்டின் செலவாக இனங்காணல்.
    5. சொத்தொன்றாக இனங்கண்டு, பின்னர் அதனைப் பதிவழித்தல்

15. பங்குடமையொன்றில் நன்மதிப்புக்கான சீராக்கத்தினை மேற்கொள்வதன் காரணம்
    1. நன்மதிப்பு எதிர்கால பொருளாதார நன்மைகளை மேம்படுத்துவதனால்
    2. நன்மதிப்புப் பெறுமதியானது காலத்துக்கு காலம் மாற்றமடைவதனால்
    3. உரிமையாண்மையில் எல்லா பங்காளர்களுக்குமான அக்கறையினை நியாயமான முறையில் உறுதி செய்ய வேண்டுமென்பதனால்
    4. பங்காளர்கள் வியாபாரத்தின் நன்மதிப்பைத் தனித்தனியாக உழைப்பதனால்
    5. நன்மதிப்பானது பங்காளர்களுக்கிடையில் சமமாகப் பகிரப்படல் வேண்டுமென்பதால்

16. கிரயம் - தொகை - இலாபம் பகுப்பாய்வில் பங்களிப்பு என்பது பின்வருவனவற்றுள் எவைகளுக்கிடையிலான வேறுபாடு
    1. விற்பனை வருவாய், இலாபம்
    2. விற்பனை வருவாய், மொத்தக் கிரயங்கள்
    3. விற்பனை வருவாய், நிலையான கிரயங்கள்
    4. விற்பனை வருவாய், மாறும் கிரயங்கள்
    5. விற்பனை வருவாய், விற்பனைக் கிரயம்

17. ஒரு முதலீட்டு தீர்மானத்திலிருந்து எழும் பின்வரும் காசுப் பாய்ச்சல்களில் எது தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தேறிய காசுப்பாய்ச்சல்களை கணிப்பிடுவதுடன் தொடர்பற்றதாக இருக்கும்.
    1. வருமானம்
    2. வட்டிச்செலவு
    3. செயற்பாட்டுச் செலவு
    4. தொழிற்படுமூலதனம்
    5. ஆரம்ப முதலீடு

18. கழகம் ஒன்றின் புத்தகத்திலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

	31.03.2011	31.03.2012
வருமதி சந்தா	64,000	48,000
முற்பணமாக பெற்ற சந்தா	13,400	18,200
பெற்ற சந்தா	240,000	360,000
பெறவேண்டிய சந்தாவில் பதிவழிப்பு	-	2200

31.03.2012இல் வருமானச் செலவு கணக்கிற்கு மாற்றப்படும் சந்தா யாது?

1. ரூபா 385,200
2. ரூபா 341,400
3. ரூபா 355,800
4. ரூபா 383,000
5. ரூபா 382,000

19. ஒரு நிறுவனத்தின் மொத்த இலாப வீதம் $33\frac{1}{3}\%$ ஆகும். ஆண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 8,000 ஆகும். செலவுகள் ரூபா 6,800 ஆகும். தேறிய இலாப வீதம் யாது?
1. 5%
2. 3.75%
3. 1.25%
4. 22.67%
5. 5.4%

20. வேலையாட்களுக்கு சம்பளம் கொடுத்தது தொடர்பில் பின்வருவனவற்றுள் எவற்றை நேர்க்கூலியாக வகைப்படுத்த முடியும்?
A - தொழிற்சாலை ஒன்றில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் பாகங்களை பொருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.
B - தொழிற்சாலையொன்றின் களஞ்சியத்தில் வேலை செய்யும் களஞ்சிய உதவியாளர் கள்.
C - கட்டுமானக் கம்பனியொன்றின் கட்டிடத் தொழில் வேலையாட்கள்
D - கணக்காய்வாளர் நிறுவனமொன்றின் வேலை செய்யும் கணினி உதவியாளர்
E - பேக்கரியொன்றின் முகாமையாளர்
1. A, C, D மாத்திரம்
2. A,C மாத்திரம்
3. A,B,C,D மாத்திரம்
4. A,B,C மாத்திரம்
5. B,E மாத்திரம்

21. விற்பனைத்தரகு பிழையாக விற்பனைக் கணக்கில் வரவலிடப்பட்டிருப்பின் பின்வருவனவற்றுள் எது குறைவாகக் காட்டப்பட்டிருக்கும்?
1. மொத்த இலாபம்
2. வருடத்துக்கான இலாபம்
3. கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காசு
4. உரிமையாண்மை
5. விற்பனைக் கிரயம்

22. உபகாரப்பங்கு வழங்கலால் ஐந்தொகையில் ஏற்படும் தாக்கம் பின்வருவனவற்றுள் எது?
1. சொத்து, பொறுப்பு இரண்டும் அதிகரிக்கும்.
2. சொத்து, பொறுப்பு இரண்டும் குறைவடையும்.
3. மூலதனம் சொத்து இரண்டும் அதிகரிக்கும்.
4. உரிமை மூலதனம் அதிகரிக்கும் பொறுப்புக் குறையும்.
5. உரிமை முதல், சொத்துக்கள் இரண்டிலும் மாற்றம் எதுவும் ஏற்படாது.

23. இராணி வீட்டுப் பாவனைக்கான கொள்கலன்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்தார். அதன் விபரம் வருமாறு

திகதி	கொள்வனவு	விற்பனை
ஜனவரி 1	10 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 3,000	-
ஜனவரி 5	-	8 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 3,500
ஜனவரி 20	10 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 4,200	-
ஜனவரி 25	-	7 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 5,000

ஜனவரி மாத இறுதியில் இருப்பின் பெறுமதியானது இருப்புக்கான கணக்கீட்டு நியமத்துக்-கமைய பின்வருவனவற்றுள் பொருத்தமானது
1. ரூபா 21,000 நிறைப்படுத்தப்பட்ட சராசரிக்கிரயம்
2. ரூபா 20,000 முதலுள் முதல் வெளியே முறையில்
3. ரூபா 21,000 நிறைப்படுத்தப்பட்ட சராசரிக் கிரயம், ரூபா 20,000 முதலுள் முதல்வெளி
4. ரூபா 20,000 நிறைப்படுத்தப்பட்ட சராசரிக் கிரயம், ரூபா 21,000 முதலுள் முதல்வெளி
5. ரூபா 18,000 நிறைப்படுத்தப்பட்ட சராசரிக் கிரயம்

24. தனுசன் வியாபாரத்தின் 2012 டிசம்பர் மாதத்துக்கான பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- டிசம்பர் 31 இல் வங்கிக் கூற்றின்படி மேலதிகப் பற்று மீதி ரூபா 15,000
- வைப்புச் செய்யப்பட்டு ஆனால் வசூலிக்கப்படாத காசோலை ரூபா 9,000
- வழங்கப்பட்டு ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 10,000
- காசேட்டில் பதியப்படாத நிலையான கட்டளை கொடுப்பனவு ரூபா 6,000
- காசேட்டில் பதிவு இடம்பெறாத மறுக்கப்பட்ட காசோலை ரூபா 8,000

மேற்கூறிய வேறுபாடுகளை சீராக்கியதன் பின்னர் காசேட்டு மேலதிகப்பற்று மீதியானது

1. ரூபா 38,000
2. ரூபா 2,000
3. ரூபா 16,000
4. ரூபா 1,000
5. ரூபா 14,000

25. A, B, C ஆகியோர் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாபநட்டங்களை பகிரும் பங்குடமையிலிருந்து C இளைப்பாற ஏனைய பங்காளர்கள் இலாப நட்டத்தை சமமாகப் பகிர்வர். அன்றைய தினம் நன்மதிப்பு ரூபா 60,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்பு கணக்கில் ரூபா 30,000 மீதி காணப்பட்டது. C ஓய்வு பெற்ற தினத்திலிருந்து நன்மதிப்பு கணக்கினைப் பேணுவதில்லை எனப் பங்காளர் தீர்மானித்தார். மேற்கூறிய நிகழ்வினால் பங்காளரின் மூலதன கணக்கு மீதிகளில் ஏற்படும் தேறிய தாக்கம் யாது?

	A	B	C
1.	தாக்கம் இல்லை	வரவு 12,000	செலவு 12,000
2.	தாக்கம் இல்லை	வரவு 6,000	செலவு 6,000
3.	வரவு 3,000	வரவு 3,000	செலவு 6,000
4.	செலவு 5,000	வரவு 1,000	வரவு 4,000
5.	வரவு 15,000	வரவு 21,000	செலவு 6,000

26. தனிவியாபாரியொருவரின் தேறிய சொத்தின் பெறுமதி ஓர் நிதியாண்டின் இறுதியில் ரூபா 150,000ல் குறைவடைந்தது. ஆனால் இவ்ஆண்டில் வணிகம் உழைத்த தேறிய இலாபம் ரூபா 50,000 ஆக இருந்தது. உரிமையாளர் இவ்ஆண்டில் மேலதிக மூலதனமாக ரூபா 100,000 வழங்கியிருந்தார். உரிமையாளர் இவ் ஆண்டில் பற்றிய தொகை யாது?
1. ரூபா 50,000
2. ரூபா 150,000
3. ரூபா 300,000
4. ரூபா 100,000
5. ரூபா 500,000

27. வாசனா கம்பனியின் 31.03.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கு எடுக்கப்பட்ட நிதித் தகவல்கள் வருமாறு

நடைமுறை அல்லாத சொத்துக்கள்	850,000
நடைமுறைச் சொத்துக்கள்	350,000
வட்டிச்செலவு	20,000
மொத்த இலாபம்	420,000
செயற்பாட்டு செலவுக்கு கொடுத்த காசு	150,000
வட்டி பாதுகாப்பு விகிதம் 14 மடங்குகள்	
மொத்த சொத்ததின் மீதான திரும்பல்	20%

ஆண்டுக்கான வரிகழித்த பின் இலாபம்

1. ரூபா 250,000
2. ரூபா 260,000
3. ரூபா 220,000
4. ரூபா 280,000
5. ரூபா 240,000

28. கீழ்க்காணும் கூற்றுக்களை அவதானிக்குக.

A - ஐந்தொகை ஏதாவது ஒரு காலப்பகுதிக்குரிய சொத்துக்கள், பொறுப்புகள், உரிமையாண்மையைக் காட்டும் ஓர் அட்டவணையாகும்.

B - கணக்கீட்டு நோக்கங்களில் ஒன்று பொருளாதார செயல் முறையின் விளைவுகளை மதிப்பிடல்.

C - கணக்கீட்டு கொள்கை மாற்றப்படின் அது பற்றி அதனால் ஏற்பட்ட தாக்கங்களுடன் வெளிப்படுத்தல் வேண்டும்.

D - ஐந்தொகையில் கடன்பட்டோர் மீதி, கடன் கொடுத்தோர் மீதி வெளிப்படுத்தப்படுவது அட்டுறு எண்ணக்கருவின் அடிப்படையில் ஆகும்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் சரியான கூற்று

1. A, B, C மாத்திரம்
2. B,C, D மாத்திரம்
3. A,C,D மாத்திரம்
4. A,B,D மாத்திரம்
5. A,B,C,D மாத்திரம்

29. A, B ஆகியோர் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பங்கிடுகின்றனர். இவர்கள் C என்பவரை இலாபத்தில் $\frac{1}{5}$ பங்கு பெறும் நோக்கத்துடன் புதிய பங்காளனாக சேர்த்துக் கொண்டனர். C யினை புதிய பங்காளனாகச் சேர்த்தமையினால் A, B என்பவற்றுக்கிடையிலான இழப்பு விகிதம் முறையே 2:1 ஆகும். புதிய இலாப நட்ட விகிதம் யாது?
1. 7:5:3
2. 12:8:5
3. 4:1:2
4. 1:1:1
5. 6:2:3

30. கீழே தரப்பட்டவற்றுள் பொறுப்பு ஒன்றினை இனங்காண்பதற்கு அவசியமான குணவியல்புகள் எவை?
A - பொருளியல் வளங்களின் எதிர்கால காசுப் பாய்ச்சல் சாத்தியமாக இருத்தல்.
B - உடன்படிக்கை ஒன்றில் இருந்து உருவாகியிருத்தல்.
C - கடந்தகால நிகழ்வுகளிலிருந்து உருவாகியிருத்தல்.
D - நிறுவன தற்கால கடப்பாடு ஒன்றினைக் கொண்டிருத்தல்.
1. A மற்றும் B
2. A, B மற்றும் C
3. B மற்றும் C
4. B, C மற்றும் D
5. A, B, C மற்றும் D

31. நிதிக் கூற்றுகளின் தர ரீதியான குணவியல்புகள் இரண்டு தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

32. நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்கள் இரண்டு கணக்கீட்டுச் சமன்பாடு மூலம் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

கொடுக்கல் வாங்கல்	வருமானம்	செலவுகள்	பொறுப்பு	சொத்து
01	+ 15,000		+ 3,000	+ 18,000
02		+36,000		+7,000 -43,000

மேற்படி ஒவ்வொன்றினதும் தாக்கத்துக்கான பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களினைத் தந்து அவற்றுக்கான இரட்டைப் பதிவுகளைத் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

33. ஊழியர் வேலையில் ஈடுபடும் காலத்தை கணிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படும் ஆவணங்கள் 04 தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

34. 10% பெறுமதி கூட்டல் வரி கூட்டிய வரவுத்தாள் ஒன்றின் பெறுமதி ரூபா 132,000க்கான பதிவு கடன் கொடுத்தோர் கணக்கிலும் வெளித்திரும்பல் கணக்கிலும் வரவில் ரூபா 123,000 எனப் பதியப்பட்டிருந்தது. மேற்தரப்பட்ட தவறை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவினைத் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

35. சேவைக்கிரய நிலையங்களின் மேந்தலை உற்பத்திக் கிரய நிலையங்களுக்கிடையே மீளப் பகிரப்பட வேண்டியதன் அவசியம் யாது?

……………………………………………………………………………………………

36. பங்குடமையொன்றில் ஒருவர் பங்காளர் என்ற உரிமையை பெறக்கூடிய பிரதான மூன்று முறைகளைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

37. நிதி கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தலின் பொருட்டு கவனத்தில் கொள்ளவேண்டிய எண்ணக்கரு மாதிரி சட்டகத்தின் கூறுகள் 04 இனைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

38. இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் வருமானச் செலவு கணக்கில் வரவிலும் கூடிய செலவுத் தொகைக்கான நாட்குறிப்புப் பதிவினைத் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

39. வியாபார நிறுவனமொன்றின் குறித்த ஓர் நிதியாண்டுக்கான தேறிய விற்பனைகளின் பெறுமதியும் விற்ற சரக்கின் கிரயமும் ஒரே பெறுமதியை கொண்டிருந்தன. இது தொடர்பாக கருத்துரைக்குக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

40. ஒதுக்கங்களும் ஏற்பாடுகளுக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகள் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

41. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்துக்கமைய கம்பனியொன்று வழங்கக்கூடிய பங்குகள் எவையெனக் கூறுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

42. வரலாற்று கிரய எண்ணக்கருவை கருத்தில் கொள்ளாத இரண்டு சந்தர்ப்பங்கள் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

43. இலங்கையில் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு வழிவகுத்த சட்டம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

44. பின்வரும் தகவல்கள் ஒரு பொருளினது உற்பத்தி செய்த அலகுகள், உற்பத்தி கிரயம் தொடர்பானதாகும்.

உற்பத்தி அலகுகள்	மொத்த உற்பத்திக் கிரயம்
8,000	50,000
20,000	115,000

உற்பத்தியானது 10,000 அலகுகளுக்கு மேல் அதிகரிக்கும்போது மேலதிக நிலையான கிரயமாக ரூபா 5,000 தேவைப்படுகிறது. 15,000 அலகுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

45. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்கு மீதியையும் சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, செலவு, வருமானம் என்ற வகையில் வகைப்படுத்திக் காட்டுக.

கணக்கின் பெயர்	வகைப்படுத்தல்
வெளித்திரும்பல் கணக்கு	………………………………
உட்திரும்பல் கணக்கு	………………………………
பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக்கணக்கு	………………………………
பற்றுக் கணக்கு	………………………………
வங்கிக் கடன்	………………………………

46. பின்வரும் வரைபடமானது ஒரு கம்பனியின் விற்பனை வருமானம், உதவு தொகை, நிலையான கிரயம் என்பவற்றைக் காட்டுகிறது.



இங்கு A, B, C, D குறிப்பிடுவன யாவை?

A ……………………………………….. B ………………………………………..

C ………………………………………. D ……………………………………….

47. வரையறுக்கப்பட்ட சிசில் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை வருமாறு 31.03.2012இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

விற்பனை	600
(-) விற்பனைக் கிரயம்	(300)
மொத்த இலாபம்	300
சொத்து விற்பனை மீதான இலாபம்	150
	450
(-) பெறுமானத் தேய்வு	(60)
	390
(-) செலவுகள்	(30)
தேறிய இலாபம்	360

31.03.2011இல் தொழிற்படு முதல் ரூபா 80 ஆகவும் 31.03.2012இல் தொழிற்படு முதல் ரூபா 100 ஆகவும் அமைந்தது. 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசுப் பாய்ச்சல் தொகை யாது?

………………………………………………………………………………………………

48. உற்பத்தி நிறுவனமொன்றில் 31.03.2012இல் முடிவுற்ற ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு

மொத்த உற்பத்திக்கிரயம்	ரூபா 40,000
குறைவேலை இருப்பு 31.03.2012 இல்	ரூபா 4,500
பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட் கிரயம்	ரூபா 25,000

மேந்தலை கிரயத்தின் 50% நேர்ச்செலவாகும்

31.03.2012இல் முடிவடைந்த ஆண்டுக்கான முதற் கிரயத்தையும், மேந்தலைக் கிரயத்தையும் கணிக்குக.

49. 01.01.2012இல் மோட்டார் வாகனம் ரூபா 500,000 மீதியையும், மோட்டார் பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூபா 200,000 மீதியையும் காட்டியது. 30.06.2012இல் ரூபா 150,000 காசுக்கு மோட்டார் ஒன்று விற்பனை செய்யப்பட்டது. இந்த மோட்டார் வாகனம் 01.07.2010இல் ரூபா 300,000க்கு கொள்வனவு செய்யப்பட்டது. ஒடுங்கு பாக முறையில் 10% பெறுமானத் தேய்விடப்படுகிறது. வழமையாகும் 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு தொகையினையும், மோட்டார் விற்பனையில் எழுந்த இலாப நட்டத்தையும் கணிக்குக.

50. 01.04.2012 இல் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் 2,000 பங்குகள் ரூபா 80,000 ஆகவும் சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 15,000 ஆகவும் இலாபநட்டக் கணக்கு மீதி ரூபா 10,000 ஆகவும் காணப்பட்டது. மேலதிகத் தகவல்கள்

1. 30.06.2012இல் 500 சாதாரணபங்குகள் ரூபா 50 விலையில் வழங்கல் செய்யப்பட்டது.

2. 01.10.2012இல் 400 சாதாரணபங்குகள் ரூபா 60 விலையில் உரிமை வழங்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 31.12.2012இல் 01.04.2012இல் 01.04.2012இல் உள்ள சாதாரணபங்குதாரர்கட்கு 4 பங்குகளுக்கு 1 பங்கு என்ற அடிப்படையில் உபகாரப் பங்கு வழங்கல் ரூபா 40 விலையில் மேற்கொள்ளப்பட்டது. 31.03.2013இல் கூறப்பட்ட சாதாரணபங்கு முதல் மீள் மதிப்பிட்டு ஒதுக்க கணக்கு மீதி, இலாப நட்டக் கணக்கு மீதி என்பவற்றைத் துணிக.

கணக்கீடு

வினாத்தாள் I

விடைகள்

1 - 3	11 - 5	21 - 1
2 - 2	12 - 3	22 - 5
3 - 4	13 - 4	23 - 4
4 - 1	14 - 4	24 - 3
5 - 5	15 - 3	25 - 5
6 - 1	16 - 4	26 - 3
7 - 3	17 - 2	27 - 5
8 - 5	18 - 2	28 - 2
9 - 2	19 - 1	29 - 1
10 - 1	20 - 2	30 - 5

31. பொருத்தப்பாடு, நம்பகத்தன்மை

32. 1. காசாக பெற்ற வருமானம் ரூபா 18,000
    இதில் அடுத்த வருடத்துக்குரியது ரூபா 3,000
    காசு கணக்கு வரவு 18,000
    பெற்ற வருமானக் கணக்கு செலவு 15,000
    முற்பணமாக பெற்ற வருமான கணக்கு செலவு 3,000

    2. செலவுகள் 43,000 ரூபா காசாக செலுத்தப்பட்டுள்ளது. இதில் அடுத்த வருடத்துக்குரியது ரூபா 7,000
    குறித்த செலவுக் கணக்கு வரவு 36,000
    முற்பணமாகக் கொடுத்த செலவுக்கணக்கு வரவு 7,000
    காசு கணக்கு செலவு 43,000

33. 1. நாளாந்த நேர அட்டை 2. வாராந்த நேர அட்டை
    3. வேலை நேர அட்டை 4. வேலை செய்யாது வீணான நேர அட்டை

34. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு 9,000
    தொங்கல் கணக்கு வரவு 246,000
    வெளித்திரும்பல் கணக்கு செலவு 243,000
    பெறுமதி சேர் வரி கணக்கு செலவு 12,000

35. சேவைக்கிரய நிலையங்கள் உற்பத்தியில் ஈடுபடும் செலவு நிலையங்களுக்கு சேவையை வழங்குகின்றதே தவிர உற்பத்தியில் ஈடுபடுவதில்லை. எனவே உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனத்தின் அலகுக்குரிய மேந்தலையை மதிப்பிடுவதற்கு பகிரப்படுவது அவசியம் ஆகும்.

36. மூலதனமிடல் - வட்டி
    முகாமையில் ஈடுபடல் - சம்பளம்
    முயற்சியாண்மை - இலாபம்

37. நிதிக்கூற்றுக்களின் நோக்கங்கள்
    நிதிக்கூற்றுக்களின் தகவல்களின் தர ரீதியான பண்பு
    நிதிக்கூற்றுக்களின் மூலங்களும் தர ரீதியான பண்புகளும்
    நிதிக்கூற்றுக்களின் மூலங்களும் அவற்றின் வரைவிலக்கணமும்

38. திரண்ட நிதி கணக்கு வரவு
    வருமானச் செலவுக் கணக்கு செலவு

39. தேறிய விற்பனைப் பெறுமதியாக விற்பனைக் கிரயம் காணப்படல்
    இலாப வீதத்துக்கு சமமாக பெறுமதி சேர்வரி அதிகரித்தல்

40.

The National e-learning Portal for the General Education

ஒதுக்கங்கள்	ஏற்பாடுகள்
• இலாபத்திலிருந்து மேற்கொள்ளல்	• நட்டத்துக்கு எதிராக மேற்கொள்ளல்
• இலாபம் உழைக்கும் காலத்தில் மேற் கொள்ளப்படும்	• இலாபம் உழைக்காத காலத்திலும் மேற்கொள்ளப்படும்
• நிதித் தேவைக்கு மேற்கொள்ளல்	• பாதுகாப்புத் தேவைக்கு மேற்கொள்ளல்
• ஐந்தொகையில் ஒதுக்கத்தின் கீழ் காட்டப்படும்	• ஐந்தொகையில் குறித்த சொத்திலிருந்து கழித்துக் காட்டப்படும்.

41. சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், பின்னுரிமைப் பங்குகள், வாக்குரிமையற்ற பங்குகள்
42. - சொத்துக்களை மீள் மதிப்பிடல்.
    - இருப்பினை தேறிய தேறத்தக்க பெறுமதிக்கு கொண்டுவரல்
43. 1995ம் ஆண்டின் 15ம் இலக்க கணக்கீட்டு கணக்காய்வுச் சட்டம்
44. ரூபா 90,000
45. செலவுக் கணக்கு
    வருமானக் கணக்கு
    சொத்துக் கணக்கு
    உரிமைக் கணக்கு
    பொறுப்புக் கணக்கு
46. A – இலாபநட்டமற்ற புள்ளி அலகுகளில்
    B – இலாபநட்டமற்ற புள்ளி பெறுமதியில்
    C – பாதுகாப்பு எல்லை பெறுமதியில்
    D – பாதுகாப்பு எல்லை அலகுகளில்
47. 360 + 60 – 150 – 20 = 250 ரூபா
48. ரூபா 31,500, ரூபா 13,000
49. மோட்டார் விற்பனைக் கணக்கு

மோட்டார்	300,000	பெ.தே.ஏற்	56,325
		காசு	150,000
		இ.ந.க.கு	93,675
	300,000		300,000

பெறுமானத் தேய்வுக் கணக்கு

பெ.தேய்வு	17,175	இலா.ந.கணக்குக்கு மாற்றம்	17,175

50. சாதாரண பங்கு மூலதனக் கணக்கு மீதி 149,000. மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு மீதி இல்லை. இலாப நட்டங்கள் கணக்கு மீதி ரூபா 5,000